**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.351/2023**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : **செல்வராஜ்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ரெங்கசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(22.06.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் காமராஜபுரம் வடபகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விபரம் பற்றி எனக்குதெரியும். இருசக்கர வாகனம் உடைந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவயிடத்தில் போலிசார் வரைபடம் தயார் செய்து விசாரணை செய்து கொண்டிருந்தனர். அதுசம்பந்தமாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.351/2023**

**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜாமணி | Caste | : |
| Father 's Name / Husband Name | : பாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(22.06.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் பசும்பொன் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஜென்ரேட்டர் மெக்கானிக்காக பணி புரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 11.04.2023ம் தேதி எனது நண்பர் மணிகண்டனுடன் திருமங்கலத்தில் இருந்து மதுரைக்கு சென்று கொண்டிருந்தோம். காலை 10 –11 மணிக்குள் கப்பலுர் டோல்கேட் சென்று கொண்டிருந்த போது அங்குபோலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரியை போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரியிடம் இருந்து வண்டியை இருசக்கரம் வாகனம் ஸ்பிளண்டரை கைப்பற்றியதற்காக என்னிடம் விசாரித்து கையெழுத்து பெற்றார்கள். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னுடன் வந்த மணிகண்டனும் அதில் கையெழுத்து செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

ஆஜர் எதிரியை எப்போது போலிசார் பிடித்தார்கள் என்றோ எப்போது வாகனத்தை கைப்பற்றினார்கள் என்பதோ எனக்கு தெரியாது. பிடித்து வைத்திருப்பதாக போலிசார் சொல்லி அதற்கு ஆதரவாக கையெழுத்து செய்ய சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். ஆஜர் எதிரி என் முன்பாக எந்த வாக்குமூலமும் தரவில்லை. இவரை தவிர வேறு எவரையும் போலிசார் என்னிடம் காட்டவில்லை.

**மறுவிசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.351/2023**
**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஜெய்குமார்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ராஜசேகர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(22.06.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் திருவேகம்புத்தூர் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.04.2023ம் தேதி காலை 7 மணிக்கு திருமங்கலம் நகர் காவல் நிலைய மனு எண்.26/2023 பார்வையிட்டு அந்த மனுவின் தன்மைக்கேற்ப திருமங்கலம் நகர் காவல்நிலைய குற்ற எண். 174/2023 ச/பி. 379 இதச வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு காலை 7.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் காமராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகசரிலும் மாதிரி வரைபடத்திலும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். **மேற்படி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரையுள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரியை தேடி வந்த நிலையில்

11.04.2023ம் தேதி கப்பலூர் டோல்கேட் அருகே சாலையம்மன்கோவில் அருகே வாகன தணிக்கை செய்த போது அந்தவழியாக இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் போலிசு பார்ட்டியை கண்டவுடன் திருப்பிக் கொண்டு ஓட எத்தனித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து அவர்களை விசாரிக்க முன்னுக்குபின் முரணாக அவர்கள் பெயரை மாற்றி சொன்னார்கள். பின்பு விசாரிக்க அதில் ஒருவர் இளஞ்சிறார் என்று தெரியவந்ததால் என்னுடன் வந்த சாதாரண உடையில் வந்த காவலர்கள் மேற்படி சிறாரை சாலையம்மன் பகுதியில் பாதுகாப்பாக வைத்துவிட்டு தங்கபாண்டி த/பெ.சதுரகிரி என்பவரை விசாரிக்க எந்தவொரு அச்சுறுத்தலோ ஆசைவார்த்தைகளோ இன்றி அந்த வழியாக வந்த மணிகண்டன், ராஜாமணி என்ற சாட்சிகள் முன்னிலையில் விசாரிக்க மேற்படி நபர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் பதிவுசெய்தோம். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றோம். எதிரியிடம் கையொப்பம் பெற்றோம். நானும் கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அடிப்படையில் பின்பு எதிரி ஒப்படைத்த TN 58 AV 9505 என்ற இருசக்கர வாகனத்தை அத்தாட்சி தயார் அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி சாட்சிகளிடமும் எதிரியிடமும் கையொப்பம் பெற்றேன். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நானும் கையொப்பம் செய்தேன். பின்பு வழக்குசொத்தை படிவம் 91 ன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரிக்கு தேவையான உணவு, குடிநீர் வசதிகள் செய்யப்பட்டு பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி தங்கபாண்டி மீது 379 இதச படி குற்ற இறுதியறிக்கை 12.03.2023ம் தேதி தாக்கல் செய்தேன். பின்பு இளஞ்சிறார் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

காணாமல் போன இருசக்கர வாகனத்தை போக்குவரத்து நிழற்குடை அருகே பேருந்து நிலையத்திற்கு முன்பு நிறுத்திவிட்டு சென்றதாக தான் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் வெளியூரில் இருந்து வரும் பேருந்துகள் நின்று செல்லும் என்பதால் அந்த இடத்தில் ஜனநெருக்கடி அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் ஜனங்கள் நிற்பதற்கு வசதியாக எந்தவொரு இருசக்கர வாகனங்களும் நிறுத்திவிடக்கூடாது என்பதற்காக அந்த இடத்தை நோ பார்க்கிங் ஏறியாவாக திருமங்கலம் நகர் போக்குவரத்து காவல் துறையினர் அறிவுறுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளை எப்போது எந்த இடத்தில் பிடித்தோம் என்று கால நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் கைது நேரத்தை குறிப்பிட்டுள்ளேன். அதுபோல் ஒப்புதல் வாக்குமூலத்தில் இளஞ்சிறாரை காவல் நிலையத்தில் இருந்து அழைத்ததின் பேரில் அங்கு தங்கம் மற்றும் ராமமூர்த்தி என்ற காவலர்களை நான் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் இருந்து சம்பவயிடத்திற்கு வரசொன்னதின் பேரில் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு சாதாரண உடை அணிந்த காவலர்கள் வரும் வரை சீருடை அணிந்த எங்கள் பாதுகாப்பில் தான் இருவரும் இருந்தார்கள் என்றால் சரிதான். கைது செய்வதற்கு முன்பாகவே இவர் தான் இந்த வழக்கின் குற்றவாளியான தங்கபாண்டி மூலம் எனக்கு விசாரணையில் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அப்பொழுது நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை. 13.01.2023ம் தேதி என்ற இடத்தில் மதியம் 12 மணி என்பது இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து களவு போய் 3 மாதம் கழித்துதான் எதிரிகளை கைது செய்து வாகனத்தை கைப்பற்றினோம் என்றால் சரிதான். வழக்கின் சொத்தான இருசக்கர வாகனத்தை வாதியானவர் நோ பார்க்கிங் ஏறியாவின் போக்குவரத்து காவல்துறை நிழற்குடை அருகில் காலை 10 மணிக்கு நிறுத்தி சென்ற போது அங்கு கூட்டம் அதிகமாக இருந்தபடியால் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் இருசக்கர வாகனம் நோ பார்க்கிங் ஏறியாவில் நிறுத்தப்பட்டிருப்பதை பார்த்த போக்குவரத்துபோலிசார் மேற்படி வாகனத்தை கைப்பற்றி தங்களது காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால்

சரியல்ல. வாதியானவர் புகார் கொடுத்த பொழுது வாகனம் காவல் நிலையத்தில் இருப்பதை மனதில் கொண்டு புள்ளியில் கணக்கிற்காக சந்தேகத்தின்பேரில் பிடிக்கப்பட்ட எதிரிகளை அவர்கள் தான் இருசக்கர வாகனத்தை திருடியதாக சொல்லி இந்த வழக்கினை விசாரணை செய்து தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் நேரம் காலம் குறிப்பிடப்படவில்லை என்றும் நான் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக காட்டியுள்ள இருநபர்களும் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும் என்னால் சொந்தமாக உற்பத்தி செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளை கட்டாயப்படுத்தி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**.இல்லை